1973 மார்ச் 28]

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, இந்த பின்தங்கிய மாவட்டங்கள் என்று எடுக்கப்பட்டிருக்கிற வட்டங்களில் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒரு வட்டம் கூட எடுக்கப்படவில்லை. திருத்தணி வட்டம் இருக்கிறது, பொன்னேரி வட்டம் இருக்கிறது, மதுராந்தகம் போன்ற வட்டங்கள் பின்தங்கியதாக இருக்கின்றன. சென்னையைச் சுற்றியுள்ள இவ் வட்டங்களில் தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தினுல் இந்த வட்டங்கள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில மாவட்டங்கள் முழுமையாக பின் தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் சிலசிலப் பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. நாம் எடுத்த முடிவின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பின் தங்கிய பகுதி என்று இல்லாமல், கோர்வையாக, 'கன்டிகுவஸ்' ஆக உள்ள பின்தங்கிய வட்டங்களை மத்திய அரசினர் கேட்டிருக்கிருர்கள். ஆகவேதான், இதை எடுத்து இருக்கிரேும். செங்கற்பட்டில் சில பகுதிகள் பின்தங்கியிருந்தாலும், பெரும் பகுதிகளில் ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கிற காரணத்தினுலே, மத்திய அரசினுடைய குறிப்புகள், 'பிரின்சிபில்ஸ' ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படு கின்றன, எந்தப் பகுதியும் ஒதுக்கப்படவில்லை.

Bristle Fibre Unit at Tenkasi

*546 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to market the products of the Bristle Fibre Unit, Tenkasi?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தென்காசியிலுள்ள நுண்கயிறு நாறு தயாரிக்கும் நிறுவனத்தில் தயாராகும் கலவையான கயிறுநாறு தற்சமயம் அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்குத் தேவையான மெத்தை விரிப்புகள் தயார் செய்ய விற்கப்படுகிறது. மெத்தை விரிப்புகள், ரப்பர் நாறு மற்றும் கயிற்றுப் பொருட்கள் தயார் செய்யும் நிறுவனங்களும் தொழில் கூட்டுறவு சங்கங்களும் இதை வாங்குகின்றன.

திரு. என். டென்னிஸ் : இதன் உற்பத்திக்காகப் பல சலுகைகள் கொடுப்ப தாகத் தெரிகிறது. ஆனுல், அதன் விற்பனை அதிகரிப்பதற்காக அரசு தீவிர நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அதற்காக, தீவிர நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விற்பனையைப் பொறுத்த அளவுக்கு 1969-70-லே 15.89 டன்னிலிருந்து, 1971-72-லே 124 டன்னுக உயர்ந்திருக்கிறது. மேலும் மேலும் எங்கெங்கே தேவையோ அங்கேயெல்லாம் அதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

மதுராந்தகம் பகுதியில் கயிறு தொழிற்சாலை

* 547 **வினு—திரு. சி. ஆறுமுகம் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதியில் கடலோரப் பகுதியில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுவதால் அப்பகுதியைச் சேர்ந்த முகையூர் போன்ற இடங்களில் கயிறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இரண்டாவது கேரளாவாக விளங்குகின்ற எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்திலிருக்கும் மதுராந்தகம் பகுதி தென்னை, பனை மிகுதியாக இருக்கிற பகுதியாகும். அங்கு நார் தொழில் போன்ற தொழில்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைக் கருத்திலே கொண்டுதான் சென்ற ஆண்டு ரூ. 10 லட்சம் அப்படித் தொழில்கள் தொடங்க வருகிறவர்களுக்கு தொழில் துறையிலிருந்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அதைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுக்கலாம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அங்கே முதலீடு செய்வதற்கு வசதி வாய்ப்புகள் இல்லாமல் இருப்பதால், அந்தப் பகுதிக் கடலோரப் பகுதியாக இருப்பதால், அரசே முன்வந்து அதை நடத்துவதற்குத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த முதலீடுக்காகக் கடன் தருவதாக நான் சொன்னேன். கூட்டுறவுத் துறையிலே முயற்சித்தாலும் உதவி பெறலாம்.

திரு. சி. ஆறுமுகம் : அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான மூலதனமில்லாத பகுதியாகவும், மிகமிகப் பின்தங்கிய பகுதியாகவும் இருப்பதால், அரசே அங்கு தொழிலை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.